பக்கங்கள்: 07

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 21 செவ்வாய்க்கிழமை 06.09.2022 கதிர் 192


## 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

சீரற்ற காலநிலை தொடரும் நிலையில் 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, களுத்துறை, கண்டி, மாத்தளை, கேகாலை, குருநாகல், இரத்தினபுரி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

☞2

# 22ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற வேண்டுமாயின் விசேட பெரும்பான்மை, சர்வஜன வாக்கெடுப்பு அவசியம்



### உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபையில் அறிவித்தார் சபாநாயகர்

அரசின் உத்தேச 22 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்தில் சில சரத்துக்களைள நிறைவேற்ற வேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை மற்றும் சர்வஜன வாக்கெடுப்பு அவசியமாகும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அரசால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட 22 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை சவாலுக்குட்படுத்தி சிலர் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

அந்த மனுக்களை ஆராய்ந்த உயர்நீதிமன்றம், அது தொடர்பான தமது நிலைப்பாட்டை சபாநாயகருக்கு அனுப்பிவைத்திருந்தது.

இதன்படி, இன்று முற்பகல் அதனை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

☞2

# கோட்டாபயவை மக்கள் சும்மா விடமாட்டார்கள்!

### கொதிநிலை இன்னமும் அடங்கவில்லை என்கிறார் பொன்சேகா





கோட்டாபய உள்ளிட்ட ராஜபக்ஷக்களை மக்கள் சும்மாவிடமாட்டார்கள் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

☞2

### கோடரியால் தாக்கி

## மருமகன் கொலை; மாமா சிக்கினார்!

கோடரியால் தாக்கி ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள் ளார். இந்தக் கொடூர சம்பவம் புஸ்ஸல்லாவ – இஹலகம பிரதேசத்தில் பதிவாகியுள்ளது. இருவருக்கிடையிலான வாய்த் தர்க்கம் மோதலாக மாறியமையே கொலைக்கான காரணம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொலை செய்யப்பட்ட நபரின் மனைவியின் தந்தையே இந்தக் கொலையைச் செய்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. சம்பவம் தொடர்பில் 44 வயதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## மதில் இடிந்து வீழ்ந்ததில் ஒருவர் சாவு

சீரற்ற காலநிலை காரணமாக, பேராதனை -தவுலகல - யாலகொட பகுதியில் மதில் ஒன்று இடிந்து வீடொன்றின் மீது வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றிரவு பெய்த கடும் மழையின்போது, இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று தெரிவித்தது.

இதன்போது, படுகாயமடைந்த 39 வயதுடைய

☞2

## ஒரு இறாத்தல் பாணின் விலை 350 ரூபா உயரும்

### உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு



ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 450 ரூபாவை எட்டினால், ஒரு இறாத்தல் பாணின் விலை 350 ரூபாவாக அதிகரிக்கப்படும் என்று அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

☞2

## வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 11 பேர் இந்தியாவில் கைது

### கனடா செல்ல முயன்றார்களாம்



(ந.லோகதயாளன்)

இலங்கையில் இருந்து விமானம் மூலம் தமிழகம் சென்று அங்கிருந்து கனடா செல்ல முயன்ற 11 பேர் இந்தியாவின் கியூப் பிரிவு பொலிஸாரால்

☞2

## வியாழேந்திரன், அரவிந்குமார், சுரேனுக்கு மீண்டும் இராஜாங்க அமைச்சுப் பதவிகள்







நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் சர்வகட்சி அரசமைக்கும் முயற்சி தோல்விகண்டுள்ளதால், அடுத்த வாரத்துக்குள் இராஜாங்க அமைச்சுகளின் நியமனம் இடம்பெறவுள்ளது என அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பதவியேற்பதற்குத் தயார் நிலையிலேயே

☞2

## கேரள கஞ்சாவுடன் இருவர் கைது



யாழ்., வடமராட்சி, மணல்காடு பகுதியில் 37 கிலோகிராம் கேரள கஞ்சா கைப் பற்றப்பட்டுள்ளது.

கடற்படையினரால் நேற்றிரவு மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப் பின்போது குறித்த தொகை கேரள கஞ்சா கைப்பற் றப்பட்டது.

சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று கடற்படையின் ஊடகப் பிரிவு இன்று அறிவித்துள்ளது.

## உசுப்பேத்தும் பேச்சுகள் நிறுத்தப்பட வேண்டும்!

### முஷாரப் எம்.பி. வலியுறுத்து



மக்களை உசுப்பேத்தும் பேச்சுக்கள் நிறுத்தப்பட வேண்டும். தனது பெயர் மக்கள் மத்தியில் பேசுபொருளாக மாற வேண்டும் என்பதற்காகப் பொய்யான தகவல்களைக் கூறாதீர்கள்.

☞2

## விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

பிரான்ஸிலிருந்து தனது திருமணத்துக்காக வந்திருந்த இளைஞர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

வரணியைச் சேர்ந்த ஆனந்தராசா அருட்குமார்

☞2

## புஸ்வாணமாகிவிட்டது அமைச்சரின் வாக்குறுதி

### யாழ். பல்கலை மாணவர்கள் விசனம்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் வணிக முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்கின்ற மாணவர்கள்விரிவுரைகளுக்கு வரும் போது அவர்களுக்கென தனியான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த அளித்த வாக்குறுதி காற்றில் கலந்து புஸ்வாணமாகிவிட்டது என்று பல்கலைக்கழக

☞2

## விபத்தில்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது - 34) என்ற இளைஞரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

15 ஆண்டுகளாக பிரான்ஸில் வசித்து வந்த குறித்த இளைஞர், திருமணத்துக்காக கடந்த 4 மாதங்களாக வரணியில் வந்து நின்றுள்ளார். எதிர்வரும் 12ஆம் திகதி திருமணம் இடம்பெற இருந்தது.

இந்தநிலையில் கடந்த 3ஆம் திகதி அவர் மோட்டார் சைக்கிளில் வேகமாகச் சென்றபோது மின்கம்பத்துடன் மோதி படுகாயமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அவர் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

## வியாழேந்திரன்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்குமாறு ஏற்கனவே இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வகித்தவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

35 முதல் 40 பேருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவி வழங்கப்படவுள்ளது.

வியாழேந்திரன், அரவிந்குமார், சுரேன் ராகவன் ஆகியோர் இராஜாங்க அமைச்சுப் பட்டியலில் இடம்பிடித்துள்ள தமிழ் உறுப்பினர்களாவர் எனத் தெரியவந்துள்ளது.

இராஜாங்க அமைச்சர்களின் நியமனத்தின் பின்னரே, நிலையான அமைச்சரவை நியமனம் இடம்பெறவுள்ளது.

## 8 மாவட்டங்..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுக்கப்பட்டுள்ளது. தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோட்டாவை மக்கள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு அவசரமாக அழைத்ததன் உண்மையான நோக்கம் என்ன?

அடுத்த மாதம் ஜெனிவா அமர்வு ஆரம்பமாகவுள்ள நிலையில் வெளிநாடுகளில் அடைக்கலம் கோரிய கோட்டாபயவை நாட்டுக்கு அரசு அவசரமாக அழைத்துள்ளது. இந்த அவசர அழைப்பின் பின்னணி என்ன?

மக்களுக்குப் பயந்தே, நாட்டை விட்டுத் தப்பியோடி ஜனாதிபதிப் பதவியிலிருந்து கோட்டாபய விலகியிருந்தார். அவர் மீண்டும் நாட்டுக்கு வர விரும்ப வில்லை.

இந்நிலையில், அவருக்கு விசேட பாதுகாப்பை வழங்கி அவரை அரசு ஏன் மீள அழைத்தது?

போராட்டக்காரர்கள் அடங்கிவிட்டார்கள் என்றும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் சுதந்திரமாக அரசியலில் இறங்கலாம் என்றும் அரசு கனவு காண்கின்றது.

போராட்டக்காரர்களின் கொதிநிலை இன்னமும் அடங்கவில்லை. நாட்டை நாசமாக்கிய கோட்டாபய உள்ளிட்ட ராஜபக்ஷக்களை அவர்கள் சும்மாவிடமாட்டார்கள்.

ராஜபக்ஷக்கள் மட்டுமல்ல இந்த அரசே கூண்டோடு நாட்டைவிட்டுத் தப்பியோடும் நிலை வரும் - என்றார்.

## 22ஆவது...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது, 22ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டமூலம் அரசமைப்புக்கு அமைவானதாக இருந்தாலும், சில சரத்துக்களை நிறைவேற்றுவதற்கு விசேட பெரும்பான்மையும் மக்கள் கருத்துக்கணிப்பும் அவசியம் என்று உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது என்று சபாநாயகர் தெரிவித்தார்.

## வடக்கு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் முல்லைத்தீவைச் சேர்ந்த இளைஞர்களே கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

கடந்த மாதம் 19ஆம் திகதி விமானம் மூலம் சென்னைக்குச் சென்றவர்கள் அங்கிருந்து கேரளாவின் கடற்கரை நகரான கொள்ளம் பகுதிக்குச் சென்றுள்ளனர்.

அங்கே விடுதியில் தங்கியிருந்த வேளையே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின்போது அவர்கள் கனடா செல்ல முயற்சித்தமை தெரிய வந்துள்ளது.

## புஸ்வாணம் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த தனியார் விடுதி ஒன்றில் யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளைச் சந்தித்து, மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது, யாழ். நகருக்கு வெளியாக அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்கின்ற மாணவர்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

அங்கிருந்தவர்கள் முன்னிலையில் போக்குவரத்து அமைச்சருடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்ட கல்வி அமைச்சர், உடனடியாக முகாமைத்துவ பீட மாணவர்களுக்கென தனியான விசேட போக்குவரத்துச் சேவையை வழங்க அமைச்சர் முன்வந்துள்ளார் எனவும், இது தொடர்பிலான அறிவுறுத்தல் வட இலங்கைப் போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலை முகாமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் அறிவித்தார்.

எனினும், தற்போது முகாமைத்துவ பீட மாணவர்களுக்கு விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, போக்குவரத்து சேவை தொடர்பில் வினவிய போது, தங்களுக்கு எந்தவிதமான அறிவுறுத்தலும் இதுவரை கிடைக்கவில்லை என்று வட இலங்கைப் போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் 19 ஆம் திகதி கல்வி அமைச்சருடன் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பேராசிரியர் சிவா சிவானந்தன், பல்கலைக்கழகப் பதிவாளர், விஞ்ஞான பீடாதிபதி, மருத்துவ பீடாதிபதி, மாணவ நலச்சேவை அதிகாரிகள் ஆகியோரும் மாணவர்களுடன் கலந்து கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

## மதில்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த நபர் பேராதனை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

## உசுப்பேத்தும்...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனாலேயே மக்கள் கிளர்ச்சி ஏற்படுகின்றது.

- இவ்வாறு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் குற்றம் சுமத்தினார்.

இவ்வாறானவர்களின் உரைகளை மக்கள் நம்புவதும் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டிய அவர், இது வேதனை தரும் விடயம் என்றும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மூழ்கின்ற கப்பலில் மாலுமியாகச் செயற்பட முடியாது என்று நழுவிக் கொண்ட தலைவர்கள் மத்தியில் அந்தக் கப்பலை நான் எப்படியாவது கரை சேர்ப்பேன் என்று பொறுப்பெடுத்த ஜனாதிபதி ரணிலின் தைரியத்தைப் பாராட்டுகின்றேன். அத்தோடு இந்த நாடு அவருக்கு என்றென்றும் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்தபோது எடுக்கப்பட்ட தீர்மானங்களிலே எங்கே தவறிழைத்திருக்கின்றோம் என்பதை நாம் பார்க்க வேண்டும். அது குறித்த மறு பரிசீலனை அவசியம். அரச மற்றும் எதிர்த்தரப்புக்கும் இது அவசியம்.

வற் வரி இப்போது 12 வீதத்தில் இருந்து 15 வீதமாக உயர்த்தப்பட்டதற்கு எதிராக எதிர்த்தரப்பில் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். விலை இன்னும் அதிகரிக்கும் என்று உசுப்பேத்திக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இதே அரசு வற் வரியை 8 வீதமாகக் குறைத்த போதும் கூட இந்த நாடு பாரிய பொருளாதார வீழ்ச்சியைக் காணப் போகின்றது - வற் வரி குறைக்கப்பட்டது தவறு என்று பொருளாதார நிபுணர்கள் தெரிவித்தார்கள்.

மக்கள் நலனுக்காக அன்று வற் வரி குறைக்கப்பட்டபோது பாராட்டாத எதிர்த்தரப்பினர் இப்போது குறைகாண முயல்கின்றனர். அப்படிச் செய்தாலும் தப்பு; இப்படிச் செய்தாலும் தப்பு.

சமஷ்டி முறைமை உலகமெங்கும் இருக்கின்றது. சமஷ்டி என்கின்ற அழகிய வார்த்தை பல்வேறு இனங்கள் கொண்ட ஒரு தேசத்தை ஒற்றுமையாகச் சீர்செய்து கட்டமைத்து அதை அங்கீகரித்தல் ஆகும்.

அது ஒரு சிறந்த தீர்வு முயற்சி. அதனை வைத்துப் பெரும் பீதியையே இந்த நாட்டில் உருவாக்கினர். அதே போல் ஒரு பீதி இன்று ஐ.எம்.எப். இற்கும் ஏற்பட்டிருக்கிறது.

1965 ஆம் ஆண்டு முதல் 2019 வரை 16 தடவைகள் ஐ.எம்.எப். உடன் இணைந்து செயற்பட்டிருக்கிறோம். ஆக, இந்த நாட்டில் இதுவொரு புதிய விடயமல்ல. நாடு பொருளாதார மீட்சி பெற வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்- என்றார்.

## ஒரு இறாத்தல் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் பாண் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுவதுடன், பாண் விற்பனையில் தொடர்ச்சியாக நட்டம் ஏற்படுகின்றது என அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பறிபோகும் காணிகள்

'வழித் தேங்காயைத் தெருப் பிள்ளையாருக்கு உடைப்பது' என்பார்கள். அதுதான் இப்போது காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கைங்கரியமாக இருக்கின்றது போலும்.

காணிச் சீர்திருத்தம் தொடர்பான சட்டம் பெரும் சர்ச்சைகளுக்கு மத்தியில் 1972 ஆம் ஆண்டில் அப்போதைய சிறிமாவோ பண்டாரநாயக்க அரசினால் கொண்டுவரப்பட்டது.

ஒரு தனிப்பட்ட நபரின் பெயரில் இருக்கக் கூடிய காணி விஸ்தீரனத்திற்கு உச்சசவரம்பு வைத்து, அதற்கு மேல் ஒவ்வொரு நபரிடமும் இருந்த மேலதிக காணிகள் அரசுடைமையாக்கப்பட்டன.

1972 ஆம் ஆண்டின் முதலாம் இலக்கச் சட்டம் மூலம் கொண்டுவரப்பட்ட இந்த நடைமுறைகளின் படி பெருந்தொகையான காணிகள் அரசுடைமையாக்கப்பட்டன. அவ்வாறு அரசுடைமையாக்கப்பட்ட காணிகளை 1972 ஆம் ஆண்டின் அந்த காணிகள் கட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழு பொறுப்பேற்றுக் கொண்டது

இந்தச் சட்டமும் அதன் கீழ் ஆணைக்குழுவும் வந்து இப்போது சரியாக 50 ஆண்டுகள் ஆகிவிட்டன. 50 ஆண்டுகளுக்கு மேல் இப்படி ஆணைக்குழுவின் கைகளில் இருக்கும் – இன்னொரு தரப்பிடம் மேலதிகமாக இருக்கின்றது என்ற பெயரில் அரசு சொத்துடமையாக்கப்பட்ட – காணிகள், தற்சமயம் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி சில தரப்புகளினால் சூறையாடப்படுகின்றன என்பதுதான் இப்போது அதிர்ச்சி தரும் குற்றச்சாட்டு.

உதாரணத்துக்கு ஆணைக் குழுவுக்கு பளையில் மட்டும் சுமார் நாலாயிரம் ஏக்கர் காணிகள் – பயன்படக்கூடிய மிகப் பெறுமதியான காணிகள் – உள்ளன. அவை 'ஆற்றில் போவதுதானே, அண்ணன் பிடி! தம்பி பிடி!!' என்ற மாதிரி வந்தோர் போவோர் எல்லோருக்கும் அரசியல் செல்வாக்கினால் வாரி வழங்கப்படும் நிலைமை நேர்ந்திருக்கின்றது.

பளையில் மட்டும் இந்த வகையில் உள்ள 4,000 ஏக்கர் காணியில் 1,800 ஏக்கர் காணி இராணுவத்தினரின் பண்ணைக்கு எனத் தாரை வார்க்கப்படுகின்றது.

அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தின் கீழ் காணி அதிகாரம் மாகாண சபைக்கு. ஆனால் வடக்கில் மாகாண சபை இருக்கும் வரை காணி அதிகாரம் தொடர்பில் கப்சிப் என்று அடங்கி இருந்தோர், இப்போது மாகாண சபைகள் செயலிழந்து, அவற்றின் அதிகாரங்கள், பொறுப்புக்கள் மாகாண ஆளுநர் கைகளுக்கு வந்து விட்ட பின்னர், அதிகம் குதிக்கின்றனர்.

இத்தகைய அச்சுறுத்தல்களை எல்லாம் தடுத்து நிறுத்த வேண்டிய மாகாண சபை செயல் இழந்துள்ள நிலையில் இருக்கின்ற காணிகளை சுவாகா பண்ணும் வேலைக்கு இடம் அளிக்காமல் பார்க்க வேண்டும். இந்த நிலைமையை பேணுவதற்கு தமிழ்த் தரப்புகள் கட்டமைந்த நிலையில் ஒன்றித்துச் செயல்பட வேண்டியது அவசியம். அதற்கிடையில் தென்னிலங்கை பௌத்த சிங்களப் பேரான்மை தமிழர்களின் காணி உரிமைகளையும் காணிகளையும் சின்னாபின்னமாக்கிவிடும் ஆபத்துச் சூழலே தொடர்ந்து நீடிக்கின்றது.

# பல்வேறு நெருக்கடி காரணமாக எமது நாடு பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்டது!

## சிவனேசதுரை சந்திரகாந்தன் வேதனை



(க.கிருபாகரன்)

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்தது. கிட்டத்தட்ட 30 வருட காலம் இடம்பெற்ற கோர யுத்தம் எமது மண்ணையும் விட்டு வைக்கவில்லை. மிகப்பெரிய அழிவுகளையும் சேதங்களையும் உண்டு பண்ணியது. இருந்தும் அந்த யுத்த அழிவிலிருந்து மெல்ல மெல்ல எம்மை வளர்த்துக் கொண்டு வருகையில்தான் கொரோனாத் தொற்று ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக அனைத்து விதமான வருவாய்களும் முடங்கிப் போனது என மட்டக்களப்பு மாவட்ட நாடராளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் இரண்டாவது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இத்தேசிய மாநாடு மட்டக்களப்பு தேவநாயகம் கலையரங்கில் கட்சித் தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

இதன்காரணமாக மக்கள் மத்தியில் பல்வேறான அதிருப்தி நிலை தோன்றியது. முக்கியமாக நகர்ப்புறத் தொழிலாளர்கள் பொருள்களின் விலையேற்றம் காரணமாக ஆங்காங்கே கிளந்தெழுந்தார்கள். இந்நிலையில் எமது மாவட்டத்தில் கூட மீன்பிடி மற்றும் விவசாயத்தில் ஈடுபடுவோர் பல்வேறு விதங்களில் பாதிப்படைந்தனர்.

இவ்வாறான காலகட்டத்தில் பொருளாதாரத்தை எவ்வாறு கட்டியெழுப் பலாம் என நாம் சிந்திக்க வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம். இப்போது நாம் கடன் செலுத்த வேண்டிய நாடுகள் எம்மை பல்வேறு வற்புறுத்தலுக்கு ஆளாக்கி வருகின்றன.

இந்நிலை ஏற்பட நாமே காரணமாகிறோம். இதனை நிவர்த்திக்க எமது சொந்த உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். இந்நிலையில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியைச் சமாளிக்க தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியும், கிழக்கு மாகாண மக்களும் எவ்வாறு செயற்படுவது?,எமது கட்சி 2020 ஆண்டு முன்வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை எவ்வாறு நிறைவேற்றிக் கொள்வது? என்பவற்றை நாம் ஒன்றிணைந்து சிந்திக்க வேண்டும்.

எமது தமிழ்த் தேசிய வாதிகள் கூறுகின்றமை போல் ஜனநாயகம் என்பது நாடாளுமன்றத்துக்குள் என்றால், எதையும் பேசித்தான் தீர்க்க முடியும். இணக்கப்பாட்டில்தான் அடைய முடியும்.இந்நிலையில் மக்களின் உணர்வை மதித்து, அவர்களது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு எமக்குண்டு.அந்த அடிப்படையில்தான் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்கட்சிஎமதுதேர்தல்விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், உற்பத்திப் பொருளாதாரத்தை நோக்கி நகரவும் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருக்கிறது.

அதிலே வெற்றியடையும் போது நிட்சயம் மக்கள் வாழ்வு வளம்பெறும். உண்மையிலேயே 70 இற்கு முன்னர் தென்பகுதியிலே ஆரம்பித்த ஆயுதப் போராட்டமும், 80 இற்குப் பின்னர் எமது பகுதியில் ஆரம்பித்த ஆயுதப் போராட்டமும் எழுந்தமானமாக உருவானதாக நாம் குறைவாக மதிப்பிட முடியாது. நாட்டின் சமநிலையின்மை, பொருளாதார வீழ்ச்சி, வறுமை நிலை மற்றும் எல்லோருக்கும் இந்த நாடு சொந்தமில்லை என்ற விடயங்களின் அடிப்படையில்தான் இந்தப் போராட்டங்கள் உருவாகின.

அந்தவகையில் சமத்துவமான நிலை அனைவருக்கும் உண்டு என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்பட வேண்டும். இதனைக் கிராம மட்டத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். இதன் மூலமாக மக்களின் வாழ்வு வளம்பெறும் காலம் கனிந்து வரும்.

இந்நிலையில் மஹிந்த ராஜபக்ஷவிற்குச் சிறந்த ஒரு சக்தியாக நாம் செயற்படுகின்றோம். அதனால்தான் முன்னாள் நிதியமைச் சரால் கொண்டு வரப்பட்ட கிழக்கின் உதயம் வேலைத்திட்டத்தை புதுப்பொலிவுடன் நிறைவேற முடிந்தது. நாங்கள் அனைவரும் ஜனநாயக ரீதியாக அரசாங்கத்தை கொண்டு நடத்தவே விரும்புகிறோம்.

போராட்டத்தின் மூலம் நாம் சிறந்த அரசியல் தலைவர்களை உருவாக்க முடியாது. மாறாக தேர்தல் ஒன்றினூடாகவே அதனை நிறைவேற்ற முடியும். இதனை நீங்கள் பல வருடங்களாக அறிந்திருப்பீர்கள். தென்பகுதி இளைஞர்களுக்கு அது தொடர்பான அனுபவம் இல்லை.

இலங்கையின் பொருளாதாரத்தை உடனடியாக சீர்திருத்த முடியாது என்பதை நாம் அறிந்திருந்தோம். மட்டக்களப்பு வாழ் மக்கள் எத்தனை பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வாழ்வை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாங்கள் நன்கறிவோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், பிள்ளையானும் ஜனநாயக ஆட்சியை ஏற்படுத்தவே பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

இந்நிலையில் மட்டக்களப்பு மாவட்ட மாணவர்கள் தேசிய மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களுக்குச் சென்று கல்வி கற்க வாய்ப்பு ஏற்படுத்தப்படவேண்டும். சிறிய மாணவர்கள் பாடசாலை செல்லும் நிலை ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் சிறந்த ஜனநாயக விழுமியப் பண்புகளைக் கொண்டவர்களாக திகழ வழிசெய்திட வேண்டும் இதன் ஊடாக முழு நாடும் அபிவிருத்தி காணும் நிலையேற்படும்-என்றார்.

இத்தேசிய மாநாட்டில் முன்னாள் மாகாணசபை உறுப்பினரும், தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளருமான பூ.பிரசாந்தன், கட்சியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# சந்நிதியில் தமிழக ஓதுவாரின் திருப்புகழ் இசைநிகழ்ச்சி இன்று!



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி மகோற்சவத்தை ஒட்டி இன்று 11 ஆம் திரு விழா (06.09.2022) தொடக்கம் தீர்த்தத் திருவிழா வரை தினமும் பிற்பகல் நான்கு மணிக்கும் இரவு சுவாமி திருவீதியுலா நிறை விலும் திருப்புகழ் பாமாலை இசைநிகழ்வு நடைபெறவுள்ளது.


தமிழகம் பழநி ஆலய ஓதுவார் திருமுறை இசைச்செல்வர் வெ. விக்னேஷ் ஆறுமுகம் பக்க வாத்திய சகிதம் இந்த இசைநிகழ்ச்சியை வழங்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

செவ்வாய்க்கிழமை 06.09.2022

# சீனாவில் பயங்கர நிலநடுக்கம் 46 பேர் சாவு; 50 பேர் காயம்!









பிஜீங்,செப்.06

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் நேற்று மதியம் 12.25 மணியளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

லுடிங் நகரில் இருந்து 39 கிலோ மீற்றர் தொலைவை மையமாக கொண்டு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.8 ஆக பதிவானது. இந்த நிலநடுக்கத்தால் அப்பகுதியில் உள்ள பல்வேறு கட்டடங்கள் அதிர்ந்தன. நிலநடுக்கத்தை தொடர்ந்து மக்கள் அலறியடித்துக்கொண்டு சாலைகள், வீதிகளில் தஞ்சமடைந்தனர்.

இந்நிலையில், இந்த நிலநடுக்கத்தில் 46 பேர் உயிரிழந்தனர். மேலும், 50 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களில் 29 பேர் தன்னாட்சி அதிகாரம் பெற்ற ஹன்சி தீபெதின் நகரில் அமைந்துள்ள லுடிங்கை சேர்ந்தவர்கள் என்றும் 17 பேர் யாயன் நகரத்தை சேர்ந்தவர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நிலநடுக்கத்தால் மேலும் சிலர் மாயமாகியுள்ளதால் அவர்களை தேடும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

# அல் ஜசீராவின் பெண் செய்தியாளரை சுட்டுக் கொன்றதை இஸ்ரேல் ஏற்றது

## ஆனால் அது வேண்டுமென்றே நடத்தப்பட்டது அல்லவாம்




ஜெருசலேம்,செப்.06

அல் ஜசீரா பெண் செய்தியாளர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமையை இஸ்ரேல் இராணுவம் ஒப்புக் கொண்டுள்ளது. என்றும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது. இதற்கிடையில், கடந்த மே மாதம் 11 ஆம் திகதி மேற்குக் கரைப் பகுதியில் உள்ள ஜெனின் நகரில் உள்ள முகாமில் பாலஸ்தீன பயங்கரவாத அமைப்பை சேர்ந்தவர்கள் இருக்கின்றனர் எனக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு இஸ்ரேலிய படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இது தொடர்பான செய்தியை சேகரிக்க அப்பகுதிக்கு அல் ஜசீரா செய்தி நிறுவனத்தின் பெண் செய்தியாளர் ஷிரீன் அபு அக்லேஹ் சென்றிருந்தார். அப்போது, நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஷிரீன் அபு அக்லேஹ் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ஷிரீன் அபு அக்லேஹ் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியது யார் என்பதில் தொடர்ந்து குழப்பம் நீடித்தது. இந்நிலையில், அல் ஜசீரா செய்தியாளர் ஷிரீன் அபு அக்லேஹ் தங்கள் பாதுகாப்பு படையினரின் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் இராணுவ வீரர் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தாலும், அது வேண்டுமென்றே நடத்தப்பட்டது அல்ல என்று இஸ்ரேல் வலியுறுத்தியுள்ளது.

பாலஸ்தீனியப் பயங்கரவாதிகள் எனச் சந்தேகிக்கப்பட்டவர்களை நோக்கி சுட்ட இஸ்ரேல் பாதுகாப்பு படையினரின் துப்பாக்கியால் அல் ஜசீரா நிருபர் அக்லே தற்செயலாக தாக்கப்பட்டிருக்க அதிக வாய்ப்புள்ளது, அவர் தற்செயலாக சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என இஸ்ரேல் இராணுவம் ஒப்புக் கொண்டுள்ளது.

மூத்த இராணுவ அதிகாரி செய்தியாளர்களிடம் கூறுகையில் –

இராணுவ வீரர்கள் அவரை நோக்கி சுட்ட போது, அவர் ஒரு பத்திரிகையாளர் என்று தெரியவில்லை. தவறுதலாக நடந்துவிட்டது. அவர் வேண்டுமென்றே செய்யவில்லை. அதற்காக அவர் வருந்துகிறார், நானும் வருந்துகிறேன் என்றார்.

ஆனால் நியூயோர்க்கைத் தளமாகக் கொண்ட பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் குழு இஸ்ரேல் இராணுவத்தின் அறிக்கையை விமர்சித்தது. இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கையின் போது தலையில் சுட்டு கொல்லப்பட்ட போது, அல் ஜசீரா நிருபர் அபு அக்லே ஹெல்மெட் அணிந்திருந்தார். மேலும், அபு அக்லே பிரஸ் என்று குறிக்கப்பட்ட குண்டு துளைக்காத உடையையும் அணிந்திருந்தார். இஸ்ரேல் நிருபரை வேண்டுமென்றே கொன்றதாக பாலஸ்தீன நிர்வாகம் குற்றம் சாட்டியது. இந்தக் கொலைக்கு இஸ்ரேல் பொறுப்பேற்க மறுத்துவிட்டதாக அபு அக்லே குடும்பத்தினர் தெரிவித்தனர்.

அல்-ஜசீரா நிறுவனம், இஸ்ரேலிய விசாரணை அறிகைகளை கண்டித்து, ஒரு சுதந்திரமான சர்வதேச அமைப்பின் விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது. அபு அக்லேவின் கொலையில் அவரது குடும்பமும், நம்பகமான அமெரிக்க விசாரணைக்கு அழைப்பு விடுத்துள்ளது. அபு அக்லே சுடப்பட்டபோது, அவர் அருகில் ஆயுதமேந்திய பாலஸ்தீனியர்கள் செயல்பட்டதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்று ஐ.நா. மனித உரிமைகள் அமைப்பு நடத்திய சுயேச்சை ஆய்வில் தெரியவந்தது. அவரது கொலை வேண்டுமென்றே செய்யப்பட்டதாக எந்த ஆதாரமும் இல்லை என்பதும் தெரிய வந்துள்ளது.



# இங்கிலாந்தின் புதிய பிரதமர் ரஷ்யாவைத் தடுக்க உதவுவார்

## உக்ரைன் அதிபர் நம்பிக்கை

உக்ரைனின் உறுதியான நட்பு நாடாக இங்கிலாந்து இருந்து வருகிறது. உக்ரைனின் உறுதியான நட்பு நாடாக இங்கிலாந்து இருந்து வருகிறது. உக்ரைனுக்கு இராணுவ உபகரணங்கள், நிதி மற்றும் பயிற்சி போன்ற உதவிகளை இங்கிலாந்து வழங்கியுள்ளது. இங்கிலாந்தின் முன்னாள் பிரதமர் போரிஸ் ஜோன்சன் உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கியுடன் நெருங்கிய நட்புறவை கடைபிடித்தார். போர் தொடங்கியதிலிருந்து உக்ரைனுக்கு இதுவரை 3 முறை நேரடியாகச் சென்று தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இங்கிலாந்தில் போரிஸ் ஜோன்சனுக்கு எதிர்ப்புக் கிளம்பியதைத் தொடர்ந்து, ஆளும் கொன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பதவியை போரிஸ் ஜோன்சன் இராஜினாமாச் செய்தார். புதிய தலைவர் (பிரதமர்) பதவிக்கான தேர்தலில் பதிவான வாக்குகள் அனைத்தும் நேற்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் எதிர்பார்த்தது போல, லிஸ் டிரஸ் தேர்வு ஆனார். இந்நிலையில், ரஷ்யாவை தடுக்க உக்ரைனுக்கு இங்கிலாந்தின் புதிய பிரதமர் லிஸ் டிரஸ் உதவுவார் என்று அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி நம்பிக்கை தெரிவித்தார்.

உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி நேற்றுப் பேசியபோது, ரஷ்யாவின் அனைத்து அழிவு முயற்சிகளையும் முறியடிக்கவும், எங்கள் மக்களைப் பாதுகாக்கவும் இங்கிலாந்து மற்றும் உக்ரைன் இன்னும் அதிகமாகச் செய்ய முடியும். உக்ரைனில் உள்ள நாங்கள் அவரை(லிஸ் டிரஸ்) நன்கு அறிவோம். அவர் எப்போதும் ஐரோப்பிய அரசியலின் முக்கியமானவராக இருக்கிறார். டிரஸ் உடன் ஒத்துழைப்பை தொடங்கஎதிர்நோக்கியுள்ளேன். - என்று ஜெலென்ஸ்கி கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கச்சத்தீவு ஒப்பந்தத்தை ரத்து செய்யக்கோரி இந்திய உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல்



புதுடெல்லி,செப்.06

கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்து செய்யக்கோரி மேலும் ஒரு மனு இந்திய உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிலுவையில் உள்ள மனுக்களோடு சேர்த்து இதையும் விசாரிக்க நீதிபதி அனுமதி வழங்கினார்.

மதுரையை சேர்ந்த ரமேஷ் என்பவர் இந்திய உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில் கூறியிருப்பதாவது:-

கச்சதீவு இராமநாதபுரம் சமஸ்தானத்துக்கு சொந்தமாக இருந்தது. நாடு சுதந்திரம் அடைந்த பிறகு சமஸ்தான முறை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. சமஸ்தானத்துக்கு சொந்தமான நிலப்பகுதியை மத்திய அரசு தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

மீன் வலைகளை உலர்த்தவும், சமையல் செய்யவும் கச்சத்தீவை தமிழக மீனவர்கள் பயன்படுத்தி வந்தனர். இதுபோன்ற சூழலில் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே கடந்த 1974 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன் அடிப்படையில், கச்சத்தீவு இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் சட்டவிரோதமானது. ஒப்பந்தத்தில் கையெ முத்திட இரு நாட்டு பிரதமர்களுக்கும் அதிகாரம் இல்லை.

நாடாளுமன்ற மக்களவையிலும், மாநிலங்களவையிலும் இந்த ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் பெறாததால் இது செல்லுபடியாகாது. எனவே கச்சதீவை மீண்டும் நமது மத்திய அரசிடமே ஒப்படைக்க வேண்டும். கச்சதீவை ஒட்டியுள்ள பகுதிகளில் இந்திய மீனவர்கள் மீன்பிடித்த காலம் தற்போது மாறிவிட்டது. கச்சதீவை இலங்கை கப்பற்படை முழு கட்டுப்பாட்டில் வைத்து, இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் சுமார் 1,500 மீனவர்கள் கொல்லப்பட்டு உள்ளனர். இதுபோன்ற சூழலில் இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினரிடம் இருந்து பாதுகாக்க கோரி தமிழக சட்டமன்றத்தில் கடந்த 2013, மே 3 ஆம் திகதி தீர்மானம் இயற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் தொடர்பாக மத்திய அரசு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, 1974-ம் ஆண்டு கையெழுத்தான கச்சதீவு ஒப்பந்தம் தொடர்பான ஆவணங்களைத் தாக்கல் செய்ய கோரி மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். கச்சதீவை ஒப்பந்தத்தை ரத்துச் செய்து உத்தரவிட வேண்டும்- என்று அதில் கூறப்பட்டுள்ளது.

நிலுவை மனுக்களோடு இணைக்க உத்தரவு

இந்த மனுவை நீதிபதி ஹெமந்த் குப்தா தலைமையிலான அமர்வு விசாரித்தது. அப்போது மனுதாரர் சார்பில் வக்கீல் சி.ஆர்.ஜெயசுகின் ஆஜராகி, 'ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் பாதிக்கப்படுகின்றனர்' என வாதிட்டார்.

அப்போது நீதிபதிகள், 'இதே விவகாரம் தொடர்பாக ஜெய குலலிதா தாக்கல் செய்த மனு நிலுவையில் உள்ளதே, அதை விசாரித்து தீர்ப்பு அளித்தால் போதாதா?' என வினவினர்.

இதற்கு வக்கீல் ஜெயசுகின், 'இந்த மனுவையும் ஏற்கனவே நிலுவையில் உள்ள மனுக்களுடன் இணைத்து விசாரிக்க வேண்டும்' என கோரிக்கை விடுத்தார். இதை ஏற்ற இந்திய உச்ச நீதிமன்றம் இந்த மனுவை ஏற்கனவே நிலுவையில் உள்ள மனுக்களுடன் இணைக்க உத்தரவிட்டது.

# பெங்களூரு வெள்ளக்காடாக மாறியது



பெங்களூர்,செப்.06

ஒரே நாள் இரவில் 130 மி.மீ. மழை கொட்டித் தீர்த்ததால் பெங்களூரு வெள்ளக்காடாக மாறியது. குளம்போல் மாறிய குடியிருப்புகளில் இருந்து மக்கள் படகுகளில் மீட்கப்பட்டனர்.

கர்நாடகத்தில் தென்மேற்கு பருவமழை கடந்த ஜூன் மாதம் தொடங்கியது. ஜூன் மாதத்தில் பெரிதாக மழை பெய்யாவிட்டாலும், ஜூலை மாதம் மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. அதே போல் தலைநகர் பெங்களூருவில் அவ்வப்போது மழை பெய்தது. சில நாள்களில் கனமழை பெய்து தாழ்வான பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்த நிலையும் ஏற்பட்டது. அதே போல் கடந்த ஒகஸ்டு மாதமும் மழை கொட்டித்தீர்த்தது. இதன் காரணமாக மாநிலத்தில் அணைகள், ஏரி, குளங்கள் உள்பட நீர் நிலைகள் நிரம்பின. கடந்த வாரம் ராமநகரில் பெய்த கனமழையால் 5க்கும் மேற்பட்ட ஏரிகள் உடைந்து அந்த நகருக்குள் வெள்ளம் புகுந்து பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியது. குடியிருப்புகள் நீரில் மூழ்கின. வாகனங்கள் அடித்து செல்லப்பட்டன. பெங்களூரு-மைசூரு தேசிய நெடுஞ்சாலையில் ஆள் உயரத்திற்கு மழைநீர் தேங்கியதால், பஸ்கள், கார்கள், லாரிகள் நீரில் மூழ்கின. இதனால் அந்த சாலையில் போக்குவரத்து துண்டிக்கப்பட்டு வாகனங்கள் மாற்றுப்பாதையில் திருப்பி விடப்பட்டன.

இந்த நிலையில் கடந்த ஒகஸ்டு மாதம் 30 ஆம் திகதி பெங்களூருவில் கனமழை பெய்தது. இதனால் பெங்களூரு புறநகர் சாலை வெள்ளத்தில் மூழ்கியது. இதனால் கடுமையான போக்குவரத்து நெரிசல் உண்டாகி அந்த சாலையில் அமைந்துள்ள மென்பொருள் உற்பத்தி நிறுவனங்களுக்கு வரவேண்டிய ஊழியர்கள் பணிக்கு வர முடியாமல் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இதன் காரணமாக ஐ.டி. நிறுவனங்கள் அரசு மீது ஆக்ரோஷத்தை வெளிப்படுத்தின. ஊழியர்கள் பணிக்கு வராததால் ரூ.250 கோடி இழப்பு ஏற்பட்டதாகவும், வெள்ளம் ஏற்படுவதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் தங்கள் நிறுவனங்களை வேறு இடத்திற்கு மாற்றிவிடுவதாகவும் அரசுக்கு பகிரங்க எச்சரிக்கை விடுத்தன. இதுகுறித்த புலம்பல் அடங்குவதற்குள் பெங்களூருவில் மீண்டும் பெருவெள்ளம் ஏற்பட்டு சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) இரவு 9 மணிக்கு திடீரென மழை பெய்யத் தொடங்கியது. அதிகாலை 5 மணிவரை பலத்த இடி-மின்னலுடன் மழை கொட்டித்தீர்த்தது.

பொதுவாக பெங்களூருவில் ஒரு பகுதியில் மழை பெய்தால், மற்றொரு பகுதியில் மழை இருக்காது என்ற நிலை தான் உள்ளது. ஆனால் நேற்று முன்தினம் இரவு நகரம் முழுவதும் பரவலாக மழை கொட்டித்தீர்த்தது. குறிப்பாக மகாதேவபுரா, பொம்மனஹள்ளியில் கனமழை வெளுத்து வாங்கியுள்ளது. அதாவது 130 மில்லி மீற்றர் மழை பதிவாகியுள்ளது. இதனால் அந்த பகுதியில் பரந்து விரிந்துள்ள பெல்லந்தூர் ஏரி முழுமையாக நிரம்பியது. அதில் இருந்து நீர் வெளியேறி அருகில் உள்ள குடியிருப்புகளை சூழ்ந்து கொண்டது. மழைநீருடன் சாக்கடை நீரும் சேர்ந்து அடுக்குமாடி கட்டடங்களைச் சூழ்ந்தது.

75 ஆண்டுகளில் இல்லாத அளவு பெங்களூரில் மழை பெய்து உள்ளது. இதனால் அங்கு வசிக்கும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். சர்ஜாப்புரா ரோட்டில் உள்ள ரெயின்போ லே-அவுட் வழக்கம் போல் வெள்ளத்தில் மூழ்கியது. அங்கு 300க்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. சர்ஜாப்புரா ரோடும் வெள்ளம் தேங்கி ஏரி போல் மாறிவிட்டது. அங்கு 5 அடி உயரத்திற்கு மழைநீர் தேங்கியதால், அங்கு வசிக்கும் மக்கள் வெளியே வர முடியாமல் தவித்தனர்.

அவர்களை மீட்பு படையினர் ரப்பர் படகுகள் மூலம் பத்திரமாக மீட்டு அழைத்து வந்தனர். மேலும் அங்கு வீடுகளில் இருந்த மக்களுக்கு பால், பிஸ்கட், பிரட் உள்ளிட்ட உணவுப்பொட்டலங்களை மாநகராட்சி அதிகாரிகள் பொக்லைன் எந்திரங்கள் மூலம் சென்று விநியோகம் செய்தனர்.



# வங்க – இந்திய நல்லுறவின் அடிப்படைநட்பும் பேச்சும்!

## பிரதமர் ஷேக் ஹசீனா புதுடில்லியில் விளக்கம்

புதுடெல்லி,செப்.06

வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா, நான்கு நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார். அவரை இன்று காலை பிரதமர் நரேந்திர மோடி வரவேற்றார். ராஷ்டிரபதி பவனுக்கு வந்த வங்கதேசப் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு சம்பிரதாயப்படி அரசு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதன்பின், வங்கதேச பிரதமர் கே் ஹசீனா, டெல்லி ராஜ்காட்டில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். வர்த்தகம், இணைப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான விவகாரங்கள் குறித்து இரு பிரதமர்களும் இன்று விவாதிக்க உள்ளனர். இந்தியா மற்றும் வங்கதேசம் குஷியாரா நதியில் நீர் பங்கீடு தொடர்பான ஒப்பந்தங்களில் கையெழுத்திட வாய்ப்புள்ளது. இந்தியா மற்றும் வங்கதேசம் இடையே ரெயில்வே, அறிவியல், விண்வெளி மற்றும் ஊடக ஒத்துழைப்பு ஆகியவற்றில் பயிற்சி மற்றும் தகவல் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட உள்ளன.

டெல்லியில் செய்தியாளர்களை சந்தித்த வங்கதேச பிரதமர் கே் ஹசீனா பேசுகையில், இந்தியா வங்கதேசத்தின் நட்பு நாடு. நான் இந்தியாவிற்கு வரும்போதெல்லாம், அது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது, குறிப்பாக வங்கதேச விடுதலைப் போரின் போது இந்தியா செய்த பங்களிப்பை நாங்கள் எப்போதும் நினைவுகூருகிறோம். நாம் ஒரு நட்பு உறவு கொண்டுள்ளோம். இந்தியா வங்கதேசம் ஒருவருக்கொருவர் ஒத்துழைக்கிறோம். பிரதமர் மோடியுடனான பேச்சுவார்த்தையில், நட்பின் மூலம் எந்த பிரச்சினையையும் தீர்க்க முடியும். எனவே, நாங்கள் எப்போதும் அதை செய்கிறோம் என்றார்.





# கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து கடத்தப்பட்ட பின் காணாமலாக்கப்பட்ட157 பேரின் நினைவேந்தல் நேற்று

## நிகழ்வு அனுஷ்டிப்பு

கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்ட பின்னர் காணமால் ஆக்கப்பட்டவர்களின் 32ஆவது ஆண்டு நினைவேந்தல் பல்கலைக்கழக வந்தாறுமூலை வளாகத்தின் முன் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழக கலை, காலாசார பீட மாணவர் ஒன்றியம் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்பு இணைந்து ஏற்பாடு செய்த நினைவேந்தலில் காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவுகள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

தமக்கான நீதி கோரி அவர்கள் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை நடத்தினர். பின்னர்

காணமால் ஆக்கப்பட்டவர்களை நினைவுகூர்ந்து மௌன இறைவணக்கம் மற்றும் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலியும் செலுத்தினர். 1990 ஆம் ஆண்( நடுப்பகுதியில் அரச படையினருக்கும் விடுதலை( புலிகளுக்குமிடையிலான போர் ஊக்கிரமடைந்த நிலையில் உயிர் அபாயம் காரணமாக கிழக்குப் பல் கலைக் கழக முகாமில் ஆயிரக்கணக்கான பொது மக் கள் தஞ்சமடைந்திருந்தனர். அங்கு செப்டம்பர் 5 ஆந் திகதி நடைபெற்ற சுற்றிவளைப்பின்போது 157 பே( விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்( காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.






# இளைஞர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு தம்பலகாமம் பாலம்போட்டாறு கிராமத்தில்

(ஹஸ்பர் ஏ கலீல்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட பாலம்போட்டாறு கிராமத்தில் போதை தடுப்பு, பால் நிலை சமத்துவம் தொடர்பில் இளைஞர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு இளைஞர் அகம் நிறுவனத்தின் அனுசரனையின் கீழ் இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஶ்ரீபதி அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க நேற்று பத்தினிபுரம் கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தில் இடம்பெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையில் போதைப் பொருள் பாவனையில் இருந்து விடுபடவும் அதன் ஊடான பாதக விளைவுகள் தொடர்பிலும் தெளிவூட்டப்பட்டதுடன் பால் நிலை சமத்துவம், குடும்ப வன்முறை தொடர்பிலும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்தக் கிராம சேவகர் பிரிவில் இவ்வாறான சமூகம் சார் பிரச்சினைகளில் இருந்து மீளவும், கிராமத்தை போதை ஒழிப்பு வன்முறையற்ற குழுமம் என்ற நோக்கில் நிலையானதாக அமைக்கவும் இளைஞர், மகளிர் சங்கங்களும் இதன் போது உருவாக்கப்பட்டன.

இதில் அகம் நிறுவன இணைப்பாளர் பொ. சச்சிவானந்தம், இளைஞர் சேவை அதிகாரி ஐ. ஜாபிர், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பாமினி,பெண்கள் அபிவிருத்தி வெளிக்கள உத்தியோகத்தர் எம்.ஏ.நஸ்ரின் டிலானி, சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் பா.ஹம்சபாலன், பொலிஸ் அதிகாரி, இளைஞர், யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ‘லிப்ட்’ வசதியுடன்3 மாடிக் கட்டடம் காத்தான்குடி மீரா பாலிஹாவுக்கு!




(நூருள் ஹுதா உமர்)

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திற்குட்பட்ட காத்தான்குடி க( விக்கோட்டத்தின் மீரா பாலிஹா மகாவித்தியாலயத்தில் அமை( கப்பட்ட மூன்று மாடி கட்டடம் நேற்றுக் காலை திறந்துவைக்கப்பட்டது.

சுமார் 10 கோடி ரூபா செலவில் கிழக்கில் பார உயர்த்தியுடன் (லிப்ட் வசதியுடன்) அமைக்கப்பட்ட முதலாவது மூன்று மா( பாடசாலை கட்டடம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

பாடசாலை முதல்வர் யூ.எல். மன்சூர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் கலாநி( எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக பங்கேற்( கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப்பணிப்பாள( கலாநிதி எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா, காத்தான்குடி நக( சபைத்தவிசாளர் எஸ்.எச்.எம். அஸ்பர் உள்ளிட்ட கல்வி அதிகாரிகள், முக்கியஸ்தர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது கடந்த வருடம் க.பொ.த. உயர்தரப்பரீட்சையி( சகல துறைகளிலும் உயர் சித்தி அடைந்த மாணவிகள் கௌ( விக்கப்பட்டமையுடன் அவர்களுக்கு வழிகாட்டிய ஆசிரியர்களு( கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வின் போது கட்டடத்தை அமைப்பதற்கு முழு ஒத்துழைப் வழங்கிய முன்னாள் அமைச்சர் கலாநிதி எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்பு( லாஹ் பாடசாலை சமூகத்தினரால் பொன்னாடை போர்த்( கௌரவிக்கப்படமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# திருக்கோவில் மக்கள் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கும் எந்த செயற்பாட்டையும் மேற்கொள்ள நாம் இடமளிக்கோம்!

## இல்மனைட் அகழ்வு விடயம் தொடர்பில் கலையரசன் விசனம்

(ந.குகதர்சன்)

நீண்டகாலமாக ஓர் அழிவைச் சந்தித்து தங்கள் வாழ்வை முன்னெடுக்க முடியாமல் தத்தளிக்கும் எமது உறவுகள் நிம்மதியாக வாழக் கூடிய சூழலை இல்லாமல் செய்யும் விடயமாகவே இந்த இல்மனைட் அகழ்வு விடயம் அமையும். திருக்கோவில் மக்களின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கும் எந்த செயற்பாட்டையும் மேற்கொள்ள நாம் இடமளிக்கப்போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது திருக்கோவில் பிரதேசத்தை அழிக்கின்ற நோக்கோடு முன்னெடுக்கப்பட இருக்கின்ற இல்மனைட் தாதுப் பொருள் அகழ்வு தொடர்பில் சந்தித்துக் கலந்துரையாடினோம். திருக்கோவில் பிரதேசம் கடலை அண்டிய மிகவும் வருமானம் குறைந்த குடும்பங்களைக் கொண்ட பிரதேசம். இங்கு இல்மனைட் என்று சொல்லப்படுகின்ற தாதுப்பொருள் அகழ்வை முன்னெடுப்பதற்குரிய பணிகளை சுமார் 7 வருடங்களாக குறித்த நிறுவனங்கள் மேற்கொள்கின்ற போது பிரதேச மக்களும் அரசியல்வாதிகளும் காட்டிய எதிர்ப்பின் காரணமாகத் தடுக்கப்பட்டிருந்தாலும் தற்போது இந்தச் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்குரிய பணிகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் அறியக் கிடைத்தது. இது தொடர்பில் எமது மக்களுக்குத் தெளிவூட்ட வேண்டியது எமது கடப்பாடாகும்.

ஒரு பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் இருக்கின்ற நிலையில் இதற்கு மாறாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்திலே தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு இந்த இல்மனைட் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனநாங்கள் அறிகின்றோம்.

இவ்வாறான செயற்பாடுகளை நாங்களும் எமது மக்களும் எதிர்க்கின்றோம். குறிப்பாக இந்தப் பிரதேசம் கடந்த காலங்களில் கடலரிப்பால் பாதிக்கப்பட்டு பயன் தருகின்ற பல மரங்கள் கூட அழிவுற்று எமது ஆலயங்கள் மக்களின் வீடுகள் எல்லாம் கடலால் சூழப்படுகின்ற இந்த நிலையிலே இவ்வாறான இல்மனைட் தாதுப் பொருள் அகழ்வு இடம்பெற்றால் எமது இந்தப் பிரதேசத்துக்கு மிகவும் பாரிய அழிவு ஏற்படும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

நீண்டகால ஓர் அழிவைச் சந்தித்த இந்தப் பிரதேசத்திலே தங்கள் வாழ்வை முன்னெடுக்க முடியாமல் தத்தளிக்கும் எமது உறவுகள் சுதந்திரமாக – நிம்மதியாக – வாழக்கூடிய ஒரு சூழலை இல்லாமல் செய்யும் விடயமாகவே இந்த இல்மனைட் அகழ்வு விடயம் அமையும். இந்த அடிப்படையில் எமது பிரதேசத்தில் இவ்வாறான தாதுப் பொருள் அகழ்வை நாங்கள் முற்றுமுழுதாக எதிர்க்கின்றோம். இதன் விளைவாக எமது மக்களின் வாழ்வாதாரமாக மேற்கொள்ளப்படுகின்ற மேட்டுநிலப் பயிர்ச்செய்கை கூட பாதிக்கப்படும். குறிப்பாக இவ்வாறான அகழ்வுகள் நடைபெறுகின்ற போது நிலக்கீழ் நீர் உவர் நீராக மாற்றம் பெற்று எமது மக்கள் குடிநீருக்குக் கூட அவதியுற்று நோய்வாய்ப்படும் அச்சுறுத்தலும் எதிர்காலத்தில் இடம்பெற வாய்ப்புண்டு.

இந்த அடிப்படையில் எங்களுடைய இந்தப் பிரதேசத்தில் இவ்வாறான அகழ்வு மேற்கொள்ளப்படுவதை நாங்கள் முற்றுமுழுதாக எதிர்க்கின்றோம். இது ஓர் அத்தியாவசியமற்ற விடயமாகவே நாங்கள் பார்க்கின்றோம். இன்று இந்தியாவில் கூட இவ்வாறு அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு அந்தப் பிரதேச மக்கள் புற்றுநோய்க்கு உள்ளாக்கப்பட்டு அந்தப்பிரதேச மக்கள் ஆரோக்கியமற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றமையையும் நாங்கள் படித்திருக்கின்றோம்.

எனவே எமது பிரரேசத்தில் இவ்வாறான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும். எமது மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கு உதவிகளைச் செய்வதைத் தவிர்த்து அவர்களை அழிப்பதற்குரிய விடயங்களைக் கையாள்வதாகவே இதனை நாங்கள் கருதுகின்றோம்.

இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற அடிப்படையில் நாங்கள் பல முயற்சிகளை எடுத்திருக்கின்றோம். 2021ஆம் ஆண்டு இந்த விடயம் தொடர்பில் அமைச்சருடனான கலந்துரையாடலின் போது ஒலுவில் துறைமுகத்தில் இருந்து பொத்துவில் வரையான பிரதேசத்தை மையமாக வைத்து இந்த இல்மனைட் அகழ்வு நடவடிககையை மேற்கொள்வதற்குரிய முன்னேற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பில் எடுத்துக் கூறியிருந்தோம். இதன்போது எமது கிராமங்களில் அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க மாட்டோம் என்றும் குறிப்பாக மக்களைப் பாதிக்கும் செயற் பாடுகளை மேற்கொள்ள மாட்டோம் என்றும் அமைச்சர் உறுதியளித்திருந்தார். அதன் பிற்பாடு தற்போது அவசர அவசரமாக இந்த விடயங்கள் மீண்டும் முன்னெடுப்படுவதாகவும், நடவடிக்கைகள் பூரணப் படுத்தப்பட்டிருக்கின்றன எனவும் நாங்கள் அறிகின்றோம்.

இந்தப் பிரதேசத்தில் இருக்கும் அதிகாரிகள், அரசியல் ரீதியான மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களையெல்லாம் உதாசீனம் செய்து விட்டு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதென்பது மிகவும் மோசமானதொரு செயற்பாடு. இதனை முற்றுமுழுதாக நாங்கள் எதிர்ப்போம். எமது மக்களின் நலனுக்காக இந்தக் களத்திலே நிற்போம். இந்த விடயங்களுக்குக் குறிப்பிட்ட சிலர் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் நாங்கள் அறிகின்றோம். அவ்வாறு அவர்கள் செய்வதாயின் நேரடியாக மக்களுக்கு அதனைத் தெரியப்படுத்த வேண்டும். மக்களின் வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கும் எந்த செயற்பாட்டையும் மேற்கொள்ள நாம் இடமளிக்கப்போபவர்கள் அல்லர் என்று தெரிவித்தார்.

# கனகராயன்குளக் கட்டடத்தை மக்கள் பாவனைக்கு வழங்குக!

## வலியுறுத்துகிறார் சுரேஷ் க.பிரேமச்சந்திரன்

வடமாகாணத்தில் தடைபட்டிருந்த ரயில் சேவையை மீள ஆரம்பிப்பதற்கான கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு இந்திய ரயில் சேவை கட்டுமான நிறுவனத்துக்கு இலங்கை அரசாங்கம் ஒப்பந்தத்தை வழங்கியிருந்தது. இந்திய கட்டுமான நிறுவனத்தால் தமது அலுவலகத் தேவைகளுக்காகவும் ஊழியர்கள், அதிகாரிகள் தங்கியிருப்பதற்காகவும் கனகராயன் குளத்தில் மூன்று ஏக்கர் நிலப்பரப்பில் சில கட்டடங்கள் கட்டப்பட்டன. தண்டவாளம் அமைக்கும் பணி நிறைவடைந்தவுடன் கட்டடத்தை தனது நன்கொடையாகக் கொடுத்துவிட்டு அந்த நிறுவனம் அந்த இடத்தை உரியவர்களிடம் மீளக் கையளித்துவிட்டது. தற்பொழுது அந்த இடத்தை பொலிஸ் பயிற்சிப் பாடசாலைக்கு வழங்குமாறு வடமாகாண ஆளுநர் அழுத்தம் கொடுத்து வருகின்றார். ஆளுநரின் கோரிக்கை அர்த்த மற்றது என்று தெரிவித்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச் சந்திரன் இது தொடர்பாக ஓர் அறிக்கையையும் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கையின் முழுவிவரம் வருமாறு –

வவுனியாவுக்கும் காங்கேசன்துறைக்குமிடையிலான புதிய ரயில்பாதை அமைக்கப்பட்டபோது இர்கான் என்று சொல்லக்கூடிய இந்திய ரயில் கட்டுமான நிறுவனம் ஒன்று தனது உத்தியோகத்தர்களைத் தங்க வைப்பதற்காக கனகராயன்குளத்தில் மூன்று ஏக்கர் காணியில் 25 அறைகள் கொண்ட ஒரு தங்கும் விடுதியையும் அதனுடன் இணைந்த சில அலுவலகக் கட்டடங்களையும் நிர்மாணித்திருந்தது. இந்தக் கட்டடங்களை அமைப்பதற்கான காணியை வவுனியா வடக்கு பிரதேச செயலகம் ஒதுக்கிக்கொடுத்திருந்தது. அவர்களது பணிகள் முடிந்ததன் பின்னர் அந்தக் காணி மீள ஒப்படைக்கப்படும் என்பதன் அடிப்படையிலேயே அந்த காணி வழங்கப்பட்டது.

2013 இல் மேற்படி காணியில் கட்டப்பட்ட இந்தக் கட்டடங்கள் 2021 இல் ரயில்பாதை நிர்மாணப் பணிகள் முழுமையாக நிறைவடைந்ததன் பின்னர் இந்திய ரயில் நிர்மாண நிறுவனம் தனது அலுவலகம் மற்றும் விடுதியிலிருந்து வெளியேறியது. அந்த விடுதி மற்றும் அலுவலகங்கள் வன்னி பிரதேச மக்களின் பாவனைகளுக்காக அந்த நிறுவனத்தால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. அதனுடைய இன்றைய பெறுமதி இலங்கை ரூபாவில் பத்துகோடிக்கும் மேல் என்று சொல்லப்படுகிறது.

மேற்படி கட்டடத் தொகுதியை 2021ஆம் ஆண்டு பொலிஸாருக்கான கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு வழங்குமாறு பொலிஸார் கேட்டிருந்தனர். ஆனால் அப்படியான தேவை ஏதும் ஏற்படாத நிலையில் அத்தகைய தேவைகளுக்காக அந்தக் கட்டடம் பாவிக்கப்படவில்லை. இந்நிலையில், தற்பொழுது வடக்கிலிருந்து தெற்கிற்கும் தெற்கிலிருந்து வடக்கிற்கும் செல்கின்ற பொலிஸார் தங்கி இளைப்பாறிச் செல்வதற்கான இடைத்தங்கல் விடுதியாக பயன்படுத்துவதற்கு பொலிஸார் கோரிக்கை விடுத்திருந்தனர். அந்தக் கோரிக்கை நியாயமற்றது என்ற நிலையில், எப்படியாவது அந்தக் கட்டடத் தொகுதியைக் கைப்பற்றிவிடவேண்டும் என்று நினைத்த பொலிஸார், இப்பொழுது பொலிஸாரின் பயிற்சிப் பாடசாலையாக அதனைக் கையாள்வதற்கு அதனைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி வடக்கு மாகாண ஆளுநருக்குக் கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளதாக அறிகின்றோம்.

ஏற்கனவே செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் பொலிஸாரின் பயிற்சிப் பாடசாலைக்காக 25 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கின்ற சூழலில், கனகராயன்குளத்தில் அமைந்துள்ள வன்னி மக்களின் தேவைகளுக்காக அன்பளிப்பாக வழங்கப்பட்ட அந்தக் கட்டடத்தை உடனடியாக பொலிஸாருக்குக் கொடுக்குமாறு ஆளுநர் உத்தரவு வழங்கியிருப்பதாகவும் அறிகின்றோம். பொலிஸாரின் பயிற்சிப் பாடசாலைக்காக ஏற்கனவே காணி வழங்கப்பட்டுள்ள நிலையில் இந்தக் காணியையும் ஆளுநர் வழங்கச் சொல்வதில் எத்தகைய நியாயமுமில்லை. நாட்டின் இன்றைய பொருளாதார சூழலில் இத்தகையதொரு பாரிய கட்டடத்தை நிர்மாணிப்பது என்பது மத்திய அரசிற்கோ அல்லது மாகாணசபைக்கோ கடினமான காரியமாகும். அது மாத்திரமல்லாமல் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களுக்கு மிகவும் அண்மித்த பிரதேசமாக இது இருப்பதன் மூலம் இது ஒரு பிராந்திய பயிற்சி மையமாகவோ அல்லது வன்னி நிர்வாகங்களைக் கவனிக்கக்கூடிய மாகாணசபை நிர்வாகமாகவோ அது செயற்படுவதே சாலச்சிறந்தது. எனவே ஆளுனர் அவர்கள் பொலிசாருக்கு அதனைக் கையளிக்கவேண்டும் என்ற உத்தரவைக் கைவிட்டு வன்னி மக்களின் நலன்கள் சார்ந்து சிந்திக்க வேண்டும். – என்றுள்ளது.

# கல்வி அமைச்சரின் வாக்குறுதிகள் காற்றில் கலந்த புஷ்வாணமாகியது!

## யாழ். பல்கலை மாணவர்கள் விசனம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வணிக முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்கின்ற மாணவர்களை ;விரிவுரைகளுக்கு வரும் போது அவர்களுக்கென தனியான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிறேம்ஜெயந்த அளித்த வாக்குறுதி காற்றில் கலந்து புஸ்வாணமாகி விட்டது என பல்கலைக்கழக மாணவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்தஒகஸ்ட்மாதம்19ஆம்திகதியாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த கல்வி அமைச்சர் கலாநிதி சுசில்பிறேம்ஜெயந்த தனியார் விடுதி ஒன்றில் யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளைச் சந்தித்து, மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின் போது, யாழ். நகருக்குவெளியாக அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வணிக முகாமைத்துவ பீடத்தில் கல்வி கற்கின்ற மாணவர்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

அங்கிருந்தவர்கள் முன்னிலையில் போக்குவரத்து அமைச்சருடன் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டகல்வி அமைச்சர் –

உடனடியாகமுகாமைத்துவபீடமாணவர்களுக்கென தனியான சிறப்பு போக்குவரத்து சேவையை வழங்க அமைச்சர் முன்வந்துள்ளார் எனவும், இது தொடர்பிலான அறிவுறுத்தல் வட இலங்கைப் போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலை முகாமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் அறிவித்தார்.

எனினும், திங்கட்கிழமை முதல் முகாமைத்துவ பீடமாணவர்களுக்கு விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, போக்குவரத்து சேவை தொடர்பில் வினவிய போது, தங்களுக்கு எந்தவிதமான அறிவுறுத்தலும் இதுவரை கிடைக்கவில்லை என்று வட இலங்கைப் போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் 19 ஆம் திகதி கல்வி அமைச்சருடன் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பேராசிரியர் சிவா சிவானந்தன், பல்கலைக்கழகப் பதிவாளர், விஞ்ஞான பீடாதிபதி, மருத்துவ பீடாதிபதி, மாணவ நலச்சேவை அதிகாரிகள் ஆகியோரும் மாணவர்களுடன் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.